முள்ளுக் குறும்பர் பழங்குடி மக்களின் வாழ்வியல் விழுமியங்கள்

4

The Lifestyle Values of the Mullu Kurumba Tribal People

பிரஷிலா.சு, தமிழ்த்துறை, ஸ்ரீ ராமகிருஷ்ணா கலை மற்றும் அறிவியல் கல்லூரி, கோயம்புத்தூர் -641006

Prashila.S, Department of Tamil, Sri Ramakrishna college of Arts & Science – 641006

ORCID ID:https://orcid.org/0009-0008-1238-8619

DOI: 10.5281/zenodo.21735757

Abstract

A society's 'kinship systems' and 'values of living' play a pivotal role in determining its civilizational maturity and cultural stability. Regardless of the extent of technological advancement in human civilization, it is social norms that bind a community together, preventing its disintegration. Even amidst the intense impact of modern globalization, industrialization, and urbanization, the fact that the Mullu Kurumbas of the Western Ghats have preserved their traditional family structures and clan norms intact is a phenomenon of great anthropological interest. Furthermore, this study highlights how their life-cycle rituals—spanning from birth to death—transcend mere ceremony to function as social instruments that renew the duties and rights shared among kin. The significance of this study lies in documenting—in written form—the oral traditions and social norms of an ancient tribe that are otherwise fading away in the relentless flow of time. Understanding the way of life of the Mullu Kurumbas—who continue to thrive as a crime-free, autonomous community under the guidance of their village head, known as the 'Mooppan' is essential.

ஆய்வுச்சுருக்கம்

ஒரு சமூகத்தின் நாகரிக முதிர்ச்சியையும், அதன் பண்பாட்டு நிலைத்தன்மையையும் தீர்மானிப்பதில் அச்சமூகத்தின் 'உறவுமுறை' மற்றும் 'வாழ்வியல் விழுமியங்கள்' ஆகிய இரண்டும் மிக முக்கியப் பங்கு வகிக்கின்றன. மனித நாகரிகம் எவ்வளவுதான் தொழில்நுட்ப ரீதியாக வளர்ச்சியடைந்தாலும், ஒரு குழுவைச் சிதையாமல் பிணைத்து வைத்திருப்பது அவர்களின் சமூக விதிகளே ஆகும். தற்கால நவீன உலகமயமாக்கல், தொழில்மயமாக்கல் மற்றும் நகரமயமாக்கலின் தீவிரத் தாக்கத்திற்கு மத்தியிலும், மேற்குத் தொடர்ச்சி மலையின் முள்ளுக்குறும்பர்கள் தங்களின் பாரம்பரியக் குடும்ப அமைப்பையும், குல விதிகளையும் சிதையாமல் பாதுகாத்து வருவது மானிடவியல் நோக்கில் ஆச்சரியமளிக்கும் ஒரு நிகழ்வாகும்.மேலும், பிறப்பு முதல் இறப்பு வரையிலான இவர்களின் வாழ்வியல் சடங்குகள் எவ்வாறு வெறும் சடங்குகளாக மட்டும் நின்றுவிடாமல், உறவினர்களுக்கு இடையேயான கடமைகளையும், உரிமைகளையும் புதுப்பிக்கும் சமூகக் கருவிகளாகச் செயல்படுகின்றன என்பதையும் இந்த ஆய்வு வெளிச்சமிட்டுக் காட்டுகிறது. இவ்வாய்வின் முக்கியத்துவம் என்பது, கால வெள்ளத்தில் மறைந்து வரும் ஒரு தொல்மூத்த பழங்குடியினரின் வாய்மொழி மரபுகளையும், சமூகக் கட்டுப்பாடுகளையும் எழுத்துவடிவில் ஆவணப்படுத்துவதில் அடங்கியுள்ளது. 'மூப்பன்' எனப்படும் ஊர்த் தலைவரின் வழிகாட்டுதலில் இன்றும் குற்றங்களற்ற தன்னாட்சிச் சமூகமாக விளங்கும் முள்ளுக்குறும்பர்களின் வாழ்வியலை

அறிந்துகொள்வது மிகவும் அவசியமாகும்.

Keywords: முள்ளுக்குறும்பர், பாடி, சடங்கு, வழிபாடு, குடி, *MulluKurumbar*, *settlement*, *ritual*, *worship*, *clan*.

முன்னுரை

முள்ளுக்குறும்பர்கள் என்பவர்கள் இந்தியாவின் தென்பகுதியான மேற்குத் தொடர்ச்சி மலைப்பகுதிகளில் வாழும் தொல்மூத்த பழங்குடியின சமூகத்தினர் ஆவர். இவர்கள் தங்களின் பிரத்யேக மொழி, பண்பாடு, வாழ்வியல் நெறிகள் மற்றும் சமூகக் கட்டுப்பாடுகள் மூலம் நவீனச் சமூகத்திலிருந்து தங்களை வேறுபடுத்திக் காட்டுகின்றனர். அந்த வகையில், தென்னிந்தியாவின் மேற்குத் தொடர்ச்சி மலைத்தொடர்களில், குறிப்பாகத் தமிழ்நாடு, கேரளா மற்றும் கர்நாடகா ஆகிய மூன்று மாநிலங்களின் எல்லைகள் சந்திக்கும் நீலகிரி மலைத்தொடர் மற்றும் வயநாடு பீடபூமிப் பகுதிகளில் வாழும் 'முள்ளுக் குறும்பர்கள்' தனித்துவமிக்க ஒரு பழங்குடிச் சமூகத்தினர் ஆவர். புவியியல் ரீதியாக இவர்கள் காடுகளும், மலைகளும், நீர்நிலைகளும் சூழ்ந்த இயற்கை எழில் கொஞ்சும் சூழலில், தங்களின் பாரம்பரிய வாழ்விடங்களான 'பாடி' எனப்படும் கிராமங்களில் குழுக்களாக வாழ்ந்து வருகின்றனர். தமிழ்நாட்டின் நீலகிரி மாவட்டத்தில் உள்ள பந்தலூர், கூடலூர் வட்டங்களிலும், கேரளாவின் வயநாடு மாவட்டத்தில் உள்ள சுல்தான் பத்தேரி, மானந்தவாடி, கல்பட்டா போன்ற பகுதிகளிலும் இவர்களின் மக்கள் தொகை செறிந்து காணப்படுகிறது.

முள்ளுக்குறும்பர் பெயர்க்காரணம் மற்றும் மொழி

'குறும்பர்' என்ற சொல்லுக்குக் 'குறும்பு' ஆடு மேய்த்தல், காடு சார்ந்த தொழில் அல்லது குறுகிய நிலப்பரப்பில் வாழ்வோர் என்று பொருள் கூறுவர். எனினும், நீலகிரிப் பகுதியில் வாழும் இதர குறும்பர் பிரிவினரிடமிருந்து ஜேனு குறும்பர், காட்டு நாயக்கர், ஊராளி குறும்பர், பெட்ட குறும்பர் இவர்கள் தங்களை முற்றிலும் வேறுபட்ட ஒரு மேம்பட்ட சமூகமாக அடையாளப்படுத்துகின்றனர். பாரம்பரியமாக இவர்கள் வில், அம்பு எய்வதில் மிகச் சிறந்த வேட்டைச் சமூகமாகத் திகழ்ந்தனர். 'முள்' போன்ற கூர்மையான இரும்பு முனையைக் கொண்ட அம்புகளைப் பயன்படுத்தி வேட்டையாடியதால், இவர்கள் 'முள்ளுக் குறும்பர்' என்று அழைக்கப்படலாயினர் என்பது பொதுவான கருத்தாகும். இவர்களின் பேச்சுமொழி 'கோத்தர பாஷை' என்று அழைக்கப்படுகிறது. இது திராவிட மொழிக் குடும்பத்தைச் சேர்ந்த, தமிழும் மலையாளமும் கலந்த ஒரு பிரத்யேக வடிவமாகும். இவற்றுக்கெனத் தனி எழுத்து வடிவம் இல்லை என்றாலும், தலைமுறை தலைமுறையாக வாய்மொழி இலக்கியங்கள் மூலம் இவர்களின் மொழி கடத்தப்பட்டு வருகிறது.

சமூகக் கட்டமைப்பு

முள்ளுக் குறும்பர்களின் சமூகம் என்பது மிகவும் ஒழுங்கமைக்கப்பட்ட, கடுமையான கட்டுப்பாடுகளைக் கொண்ட ஒரு சமூக அமைப்பாகும். இவர்களின் சமூகக் கட்டமைப்பு மனித உறவுகளையும், அதிகாரப் பகிர்வையும் மிகத் துல்லியமாக வரையறுத்துள்ளது.முள்ளுக்குறும்பர் சமூகத்தின் மிக முக்கியமான, தவிர்க்க முடியாத அடிப்படை அலகு 'குடி' என்று அழைக்கப்படும் உள்-குல அமைப்பாகும். இவர்களிடையே பாரம்பரியமாக நான்கு முதன்மைக் குடிகள் காணப்படுகின்றன. ஒவ்வொரு தனிநபரின் 'குடி' அடையாளமும் அவரின் பிறப்பின் அடிப்படையில், தந்தை வழியிலேயே தீர்மானிக்கப்படுகிறது. ஒரு குறிப்பிட்ட குடியைச் சேர்ந்தவர்கள் அனைவரும் ஒரே ரத்தக் காரணியைக் கொண்ட சகோதர-சகோதரிகளாகக் கருதப்படுகிறார்கள். இதன் காரணமாக, ஒரே குடிக்குள் திருமணம் செய்வது கடுமையான சமூகக் குற்றமாகக் கருதப்படுகிறது. அவர்கள் எப்போதும் தங்களின் குடிக்கு வெளியேயுள்ள மற்ற மூன்று குடிகளிலிருந்து மட்டுமே மணமகன்

அல்லது மணமகளைத் தேர்ந்தெடுக்க வேண்டும்.

5

இல்லறமும் குடும்ப அமைப்பும்

பாரம்பரியமாக முள்ளுக் குறும்பர்களிடையே கூட்டுக்குடும்ப முறை நிலவி வந்த போதிலும், தற்காலப் பொருளாதாரச் சூழல் காரணமாக தனிக்குடும்ப முறையே பரவலாகக் காணப்படுகிறது. திருமணமாகிச் சிறிது காலத்திலேயே மகன்கள் தங்களின் மனைவியருடன் பெற்றோரின் வீட்டிற்கு அருகிலேயே தனியாக ஒரு வீட்டைக் (பாடி) கட்டிக்கொண்டு பிரிந்து செல்லும் வழக்கம் உள்ளது. இவர்கள் 'கணவர் வழி உறைவிட' முறையைப் பின்பற்றுகிறார்கள். அதாவது, திருமணத்திற்குப் பின் பெண் தன் கணவரின் கிராமத்திற்குச் சென்று வாழ வேண்டும். குடும்பத்தின் மூத்த ஆண் மகனே குடும்பத் தலைவராக (அச்சன்/அப்பன்) செயல்படுவார். குடும்பத்தின் பொருளாதார முடிவுகள், நில மேலாண்மை, திருமணப் பேச்சுவார்த்தைகள் மற்றும் குலச் சடங்குகளில் இவருடைய முடிவே இறுதியானது. எனினும், குடும்பத்தின் மூத்த பெண்களுக்குச் சடங்குசார் விவகாரங்களில் தகுந்த ஆலோசனைக் கூறும் அதிகாரமும் மரியாதையும் வழங்கப்படுகிறது

திருமணச் சடங்குகளில் உறவுகளின் பங்கு

முள்ளுக் குறும்பர்களின் திருமணச் சடங்குகள் பல நாட்கள் நடைபெறும் விமரிசையான நிகழ்வாகும். இதில் உறவினர்களின் பங்கு இன்றியமையாதது.மணமகனின் தந்தையும், அவரின் குடிப் பெரியவர்களும், தாய்மாமனும் மணமகள் வீட்டிற்குச் சென்று முறைப்படி பெண் கேட்க வேண்டும். திருமணத்தின் போது மணமகனுக்கு அவனது தாய்மாமனே புது ஆடைகளை வழங்கி வாழ்த்துவார். மணமகள் கழுத்தில் தாலி கட்டும் போது, மணமகனின் சகோதரி (நாத்தனார்) மணமகளுக்குப் பின்னால் நின்று சடங்குகளைச் செய்ய வேண்டும். மணமகன் வீட்டார் மணமகள் வீட்டாருக்குப் 'பரிசப் பணம்' மற்றும் தானியங்களை வழங்க வேண்டும். இது பெண்ணின் உழைப்பிற்கும், அவளை வளர்த்த குடும்பத்திற்கும் செய்யும் நன்றிக்கடனைக் குறிக்கிறது.

வாழ்வியல் சடங்குகளும் உறவுகளின் பிணைப்பும்

மனிதனின் பிறப்பு முதல் இறப்பு வரையிலான ஒவ்வொரு கட்டத்தையும் முள்ளுக் குறும்பர்கள் சடங்குகள் மூலம் புனிதப்படுத்துகின்றனர். இச்சடங்குகள் அனைத்தும் உறவினர்களை ஒன்றிணைக்கும் சமூகக் கருவிகளாகச் செயல்படுகின்றன. "மனிதனின் பிறப்பு முதல் இறப்பு வரையிலான ஒவ்வொரு காலகட்டத்தையும் முறைப்படுத்துவதே சடங்குகள். சடங்குகள் என்பவை ஒரு சமுதாயத்தின் கூட்டு மனநிலையின் வெளிப்பாடு, அவை மனிதனைத் தனிமைப்படுத்தாமல் சமூகத்தோடு பிணைத்து வைக்கின்றன." டாக்டர் சு. சக்திவேல், 'நாட்டுப்புறவியல்',ப.எண்-185.ஒரு குடும்பத்தில் குழந்தை பிறக்கும் போது, அந்தக் குடும்பத்திற்கும் அவர்களின் குடியைச் சேர்ந்தவர்களுக்கும் குறிப்பிட்ட நாட்கள் 'தீட்டு' கடைப்பிடிக்கப்படுகிறது. இக்காலத்தில் உறவினர்கள் அவர்களுக்குத் தேவையான உணவு மற்றும் உதவிகளைச் செய்வார்கள். தீட்டுக் கழிப்புச் சடங்கிற்குப் பின்னரே குழந்தை சமூகத்திற்குள் அனுமதிக்கப்படும்.குழந்தையின் ஐந்தாவது அல்லது ஏழாவது வயதில் காதுகுத்தும் சடங்கு நடைபெறும். இச்சடங்கில் குழந்தையை அவனது தாய்மாமன் தன் மடியில் அமர வைக்க வேண்டும். அவரே குழந்தைக்கு முதன்முதலில் தங்க அல்லது வெள்ளி வளையங்களைக் காதில் அணிவிப்பார்.

பூப்படைதல் சடங்கு

பெண் குழந்தைகள் பருவம் எய்தும்போது, அது இச்சமூகத்தில் பெரிய விழாவாகக் கொண்டாடப்படுகிறது.பருவம் எய்திய பெண் கிராமத்தின் பொது இடத்திலோ அல்லது வீட்டின்

ஒரு பகுதியிலோ தனிமைப்படுத்தப்பட்டு, 'தீட்டுப் பாடி'யில் வைக்கப்படுவாள்.இக்காலத்தில் கிராமத்து மூத்த பெண்களும், அவளது அத்தைகளும் அவளுக்குத் தேவையான உணவை வழங்கி, பழங்குடிப் பெண்களுக்கான ஒழுக்க நெறிமுறைகளையும், வாழ்வியல் ரகசியங்களையும் கற்றுத் தருவார்கள். இறுதி நாளில் தாய்மாமன் கொண்டு வரும் புனித நீரைக் கொண்டு நீராட்டப்பட்டு, அவள் குடும்பத்தினருடன் சேர்க்கப்படுவாள்.

இறப்புச் சடங்குகள்

முள்ளுக் குறும்பர்களின் மரணச் சடங்குகள் மிகவும் விரிவானவை. ஒரு நபர் இறந்துவிட்டால், ஒட்டுமொத்தப் பாடியும் தங்களின் அன்றாட வேலைகளை நிறுத்திவிட்டு மரண வீட்டில் கூடிவிடுவர். இறந்த உடலைக் குளிப்பாட்டுவது முதல் சுடுகாட்டிற்கு எடுத்துச் செல்வது வரை அனைத்தையும் இறந்தவரின் குடியைச் சேர்ந்த ஆண்களே செய்வர். "இறந்தவர்களின் ஆற்றல் வாழ்கின்ற மக்களுக்கு நன்மை தருவதாகக் கருதி, முன்னோர்களை வழிபாடு செய்தனர். தன் குலத்தின் முன்னோர்களில் சிறந்து விளங்கியவர்களையும், குல மக்களுக்காக உயிர் தியாகம் செய்தவர்களையும் தெய்வமாகப் பாவித்து வணங்கி வழிபட்ட வீரயுக காலகட்டத்தின் எச்சமே இன்று குலதெய்வ வழிபாடாக இருக்கின்றது." டாக்டர் சு. சக்திவேல், நாட்டுப்புறவியல்,ப.எண்-224.இறந்த முன்னோர்களின் ஆன்மாக்கள் தங்களின் பாடியிலேயே தங்கி, தங்களைக் காப்பதாக இவர்கள் நம்புகின்றனர். இதற்காக ஆண்டுதோறும் முன்னோர் வழிபாடு உறவினர்கள் முன்னிலையில் நடத்தப்படுகிறது.

இயற்கை வழிபாடு

முள்ளுக் குறும்பர்கள் இயற்கையைத் தங்களின் தாயாகக் கருதுகின்றனர். காடுகளும், மரங்களும், விலங்குகளும் இவர்களின் வாழ்வோடு பிணைக்கப்பட்டுள்ளன.காட்டில் இருந்து தங்களுக்குத் தேவையான கிழங்குகள், தேன், விறகு ஆகியவற்றை மட்டுமே சேகரிப்பார்கள். காட்டைச் சேதப்படுத்துவதோ, தேவையின்றி மரங்களை வெட்டுவதோ இவர்களிடம் பெரும் பாவமாகக் கருதப்படுகிறது.பாரம்பரியமாக வேட்டைச் சமூகமாக இருந்த போதிலும், குட்டி ஈன்ற விலங்குகளையோ, கர்பமாக இருக்கும் விலங்குகளையோ இவர்கள் வேட்டையாட மாட்டார்கள். வேட்டையாடுதல் என்பது இவர்களுக்கு ஒரு பொழுதுபோக்கோ அல்லது வணிகமோ அல்ல, அது அவர்களின் உயிர்வாழ்விற்கான கூட்டு உழைப்பு மட்டுமே. தங்களின் நிலங்களில் விவசாயம் செய்யும் போது, கூலிக்கு ஆட்களை வைக்கும் வழக்கம் இவர்களிடம் பாரம்பரியமாக இல்லை. கிராமத்தில் உள்ள அனைத்துக் குடும்பத்தினரும் ஆளுக்கு ஒரு நாள் வீதம் பரஸ்பரம் ஒருவருக்கொருவர் நிலத்தில் உழைப்பைப் பகிர்ந்துகொள்வர். வேட்டையாடி வரும் விலங்கின் இறைச்சியை வேட்டையாடிய நபர் மட்டுமே தனியாக எடுத்துச் செல்ல முடியாது. கிராமத்தின் 'மூப்பன்' முன்னிலையில், வேட்டையில் கலந்துகொண்ட அனைத்துக் குடும்பங்களுக்கும், வேட்டைக்கு வர முடியாத முதியவர்கள் மற்றும் விதவைகளின் குடும்பங்களுக்கும் சமமாகப் பகிர்ந்து அளிக்கப்பட்ட பின்னரே எஞ்சிய பகுதியை அவர்கள் பயன்படுத்துவர்.

பெண்களின் சமூக அந்தஸ்து

பல பழங்குடிச் சமூகங்களில் பெண்கள் ஒடுக்கப்படும் நிலையில், முள்ளுக் குறும்பர் சமூகத்தில் பெண்களுக்கு மிக உயரிய சமூக மதிப்பு வழங்கப்படுகிறது.குடும்பப் பொருளாதாரம் மற்றும் சேமிப்பில் பெண்களின் முடிவுகளுக்கு ஆண்கள் மதிப்பளிக்கின்றனர்.குலதெய்வ வழிபாடுகள் மற்றும் பண்டிகைகளின் போது, குடும்பத்தின் மூத்த பெண்களுக்கு 'சடங்குச் சோறு' சமைக்கும் பிரத்யேக உரிமை உண்டு. பெண்களைக் கொடுமைப்படுத்துவதோ அல்லது வரதட்சணை கேட்பதோ இச்சமூகத்தில் இல்லை. திருமணத்தின் போது மணமகன் வீடே மணமகள் வீட்டிற்குப் 'பரிசம்'

கொடுக்க வேண்டும் என்பது பெண்களின் உழைப்பிற்கு வழங்கப்படும் அங்கீகாரமாகும்.

மூப்பன்

ஒவ்வொரு முள்ளுக் குறும்பர் கிராமத்திற்கும் 'மூப்பன்' எனப்படும் ஊர்த் தலைவரே மிக உயர்ந்த சமூக மற்றும் அரசியல் அதிகாரப் பதவியில் இருப்பார். இப்பதவி பொதுவாகப் பாரம்பரியமாக (வாரிசு அடிப்படையில்) அல்லது சமூகப் பெரியவர்களால் தகுதியின் அடிப்படையில் தேர்ந்தெடுக்கப்படுகிறது. கிராமத்தில் ஏற்படும் எல்லைப் பிரச்சனைகள், குடும்பச் சண்டைகள், மற்றும் சமூக ஒழுக்க மீறல்களை விசாரித்துத் தீர்ப்பு வழங்கும் முதன்மை நீதிபதியாக மூப்பன் செயல்படுகிறார். ஊரின் பொதுவான திருவிழாக்கள் மற்றும் வழிபாடுகள் மூப்பனின் அனுமதி மற்றும் முன்னிலையிலேயே தொடங்கும்.மூப்பன் தனிச்சையாக எந்த முடிவையும் எடுப்பதில்லை. அவருக்கு ஆலோசனைக் கூற கிராமத்தின் ஒவ்வொரு குடியிலிருந்தும் தேர்ந்தெடுக்கப்பட்ட மூத்த மற்றும் அனுபவம் வாய்ந்த ஆண்களைக் கொண்ட ஒரு 'பெரியவர்கள் குழு' இருக்கும்.இக்குழுவினர் கிராமத்தின் பாரம்பரிய விதிகளையும் கலாச்சார விழுமியங்களையும் பாதுகாக்கும் பொறுப்பைக் கொண்டுள்ளனர். சமூகக் கட்டுப்பாட்டை மீறுபவர்களுக்கு உதாரணமாக, குல விதியை மீறித் ஒரே குடிக்குள் திருமணம் செய்தல் அல்லது சமூகக் குற்றங்கள் செய்தல் அபராதம் விதிப்பது அல்லது சமூக விலக்கம் செய்வது போன்ற கடுமையான முடிவுகளை மூப்பனும் இக்குழுவும் இணைந்தே எடுக்கின்றனர்.

காலமாற்றமும் தற்போதைய நிலையும்

அரசின் வனக் கொள்கைகள் மற்றும் காடழிப்பு காரணமாக, முள்ளுக் குறும்பர்களின் பாரம்பரிய வேட்டையாடுதல் மற்றும் காடு சார்ந்த பொருளாதாரம் முற்றிலும் முடக்கப்பட்டுள்ளது. இதனால், இவர்கள் தங்களின் வாழ்வாதாரத்திற்காகத் தேயிலைத் தோட்டங்கள் மற்றும் காபித் தோட்டங்களில் தினக்கூலித் தொழிலாளர்களாக மாற வேண்டிய கட்டாயத்திற்குத் தள்ளப்பட்டுள்ளனர். இது அவர்களின் கூட்டு உழைப்பு என்னும் விழுமியத்தைச் சற்றே சிதைத்துள்ளது.நவீனக் கல்வி இவர்களின் இளைய தலைமுறையினரிடம் பெரும் விழிப்புணர்வை ஏற்படுத்தியுள்ளது. பலர் பள்ளிகள் மற்றும் கல்லூரிகளுக்குச் சென்று அரசு மற்றும் தனியார் வேலைகளில் அமரத் தொடங்கியுள்ளனர். நகரமயமாக்கல் காரணமாகப் பாரம்பரிய 'பாடி'களை விட்டு வெளியேறி நகரங்களில் குடியேறும் போக்கு அதிகரித்துள்ளது. இதனால், முள்ளுக் குறும்பர் மொழி பேசுபவர்களின் எண்ணிக்கை குறைந்து, மலையாளம் மற்றும் தமிழின் ஆதிக்கம் அதிகரித்து வருகிறது.

முடிவுரை

மேற்குத் தொடர்ச்சி மலையில் பிறந்து, இயற்கையோடு இயைந்து வாழ்ந்து வரும் முள்ளுக் குறும்பர் பழங்குடியினர், மனித நாகரிகத்தின் தொடக்கக் கால விழுமியங்களின் வாழும் சாட்சிகள் ஆவர். இவர்களின் தனித்துவமான உறவுமுறைக் கட்டமைப்பும், கூட்டு வாழ்வின் மகத்துவமும் இன்றும் இவர்களை ஒரு தன்னாட்சி மிக்கச் சமூகமாக வாழ வைக்கிறது.இருப்பினும், நவீன உலகத்தின் அச்சுறுத்தல்களிலிருந்து இத்தகைய தொல்மூத்த குடிகளின் மொழியையும், தனித்துவமான கலைகளையும், சமூக விழுமியங்களையும் ஆவணப்படுத்திப் பாதுகாப்பது மானிடவியலாளர்களின் கடமை மட்டுமல்ல, ஒட்டுமொத்த மனிதச் சமூகத்தின் வரலாற்றுப் பொறுப்பாகும். இவர்களின் வாழ்வியல் விழுமியங்களை மதித்து, அவர்களின் வாழ்வாதாரத்தை உறுதி செய்வதன் மூலமே இந்தியாவின் பன்முகத்தன்மையை நாம் நிலைநிறுத்த முடியும்.

துணைநூற் பட்டியல்

1. குறும்பர்களின் உறவுமுறை ,முனைவர் தா. இராபர்ட் சத்திய சோசப், தமிழ்ப் பல்கலைக்கழகம், தஞ்சாவூர் (2001).

2. மக்கள் வாழ்வில் மந்திரச் சடங்குகள், ஞானசேகரன். தே, 2009,நியு செஞ்சுரி புக் ஹவுஸ் பி லிட்41 – பி, சிட்கோ இண்டஸ்ரியல் எஸ்டேட், அம்பத்தூர்,சென்னை – 600 098.

3. மந்திரவாதமும் போலித்தனங்களும், ஞானசேகரன். தே, 2018,நியு செஞ்சுரி புக் ஹவுஸ் பி லிட் 41 – பி, சிட்கோ இண்டஸ்ரியல் எஸ்டேட், அம்பத்தூர், சென்னை – 600 098,

4. பண்பாட்டு மானுடவியல், பக்தவத்சல பாரதி, அடையாள பதிப்பகம், 2018,1205/1, கருப்பூர் சாலை, புத்தாநத்தம், திருச்சி – 10,

Refrences

1. *Kurumbargalin uravumurai*, *Dr.T.Robert Sathya Joseph*, *Tamil Virtural University*, *Thanjaavur*, *2001*

2. *Makkal Vaalvil Manthirach Sadangugal*, *Gnasekaran.T*, *2009*, *New Senchury Book House.Pvt 41-P*, *Citko Industrial Estate*, *Ambathur*, *Chennai – 600098.*

3. *Manthiravathamum Polithanangalum Gnasekaran.T*, *2018*, *New Senchury Book House.Pvt 41-P*, *Citko Industrial Estate*, *Ambathur*, *Chennai – 600098.*

4. *Panpaatu Maanudaviyal*, *Bakthavachala Barathi*, *Adayala Pathipagam*, *2018*, *1205/1*, *Karupur Saalai*, *Puthaantham*, *Trichy – 10*

Cite this Article in English

Prashila.S "**The Lifestyle Values of the Mullu Kurumba Tribal People**" *MASIVAN : JOURNAL OF LANGUAGE AND LITERATURE STUDIES*, *ISSN: 3048-7854*, *Vol.3 Issue 2*, *July 2026*, *pp. 23-28*